# முதலாம் தவணைப் பரீட்சை – 2017

# செயன்முறைத் தொழில் நுட்பம்

| சுட்டெண் ..... | தரம் :- 07 | நேரம் : 1.30 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

➢ **பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

(1) பயிர்ச் செய்கைக்கு இன்றியமையாத அடிப்படைக் காரணி எது?

1. காற்று 2. சூரிய ஒளி 3. மண் 4. நீர்

(2) உயிரித் தடைகளை ஏற்படுத்த பயன்படுத்தப்படும் தாவரங்களின் ஒன்று

1. கிளிரிசீடியா 2. பலாஹ 3. வெண்டி 4. கத்தரி

(3) வித்துக்களை நாற்று மேடையில் இட்டு பின் நாற்றுக்களாகக் நடக்கூடிய பயிராக அமைவது

1. வெண்டி 2. போஞ்சி 3. பயற்றை 4. கத்தரி

(4) மரக்கறி வகைகள், சில பழவகைகளை வெட்டிய மேற்பரப்பு வளியுடன் தாக்கமடைந்து ஏற்படுத்தும் நிறம்

1. கபிலம் 2. கறுப்பு 3. சிவப்பு 4. மஞ்சல்

(5) ஆரோக்கியமாக உணவுகளைத் தயாரிக்கும் போது கவனம் செலுத்த தேவையற்றது

1. சமைப்பவர் 2. இடம் 3. கருவி உபகரனம் 4. விலை

(6) மின்குமிழின் மூலம் மின் சக்தி மாற்றப்படும் சக்தி

1. வெப்ப சக்தி 2. ஒளிச் சத்தி 3. ஒலிச் சத்தி 4. இயக்கசதி

(7) மின் தற்காலிகமானக் களஞ்சியபடுத்தி வைப்பது

1. தடையி 2. ஆளி 3. கொள்ளளவி 4. மின்கலம்

(8) எளிய சுற்றினை நிர்மானிப்பதற்கு பயன்படும் மென்பொருள்

1. Tool Bar 2. Word 3. V-lab Elecricity 4. Excell

(9) அண்மைக் காலத்தில் பணக் கொடுக்கல் வாங்கல்களுக்கு பயன்படுத்தப்படுவது

1. தாள், குற்றி,நாணயங்கள் 2. காசோலை
3. உண்டியல் 4. இலத்திரனியல் அட்டை

(10) உற்பத்தியாளர்கள் தமது பொருட்களின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்காக பெற்றுக்கொள்ளும் குறியீடு

1. SLS 2. GMO 3. Rs 4. HACCP

(11) வழங்குனர்கள் நியாயமற்ற முறையில் இலாபத்தை ஈட்டும் வழிமுறை

1. நட்டம் 2. சந்தை இடைவெளி
3. சந்தை மோசடி 4. வியாபாரம்

(12) திட்ட வரைபடத்தை வரையும் போது முக்கியமானதாக பயன்படுத்த வேண்டியது

1. தளவடிவங்கள் 2. நியமக்குறியீடுகள்
3. நிறங்கள் 4. அமைப்புக்கள்



kalvi.lk

(13) மனித நாகரீகத்துடன் இணைந்த கலைத்துவம் மிக்க விஞ்ஞான பூர்வமான துறை

1. தரையலங்கரிப்பு 2. வரலாறு 3. புவியியல் 4. குடியியல்

(14) நிறையுணவு கொண்ட ஒரு உணவு வேளைக்கு நாம் உணவுத் தொகுதிகளின் அளவைக் காட்டுவது

1. உணவின் தரம் 2. உணவின் இயல்பு

3. உணவின் போசணை 4. உணவுக் கூம்பகம்

(15) நுகர்வுக்கு தெரிவு செய்யும் உணவுப் பொருட்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டியது.

1. சுவை 2. விலை 3. சுகாதாரம் 4. தரம்

(16) நாற்று மேடை ஊடகத்தின் மேல் மண், கூட்டெரு ஆகியவற்றின் விகிதம்

1. 2:1 2. 1:1 3. 1:2 4. 2:3

(17) நிலக்கீழ்த் தண்டுத் துண்டங்களிலிருந்து நாற்றுக்களை பெறக்கூடிய தாவரம்

1. மரவள்ளி 2. வெண்டி 3. கத்தரி 4. இஞ்சி

(18) தடையை அளக்கப் பயன்படுத்தப்படும் அலகு எது?

1. வோல்ட் 2. அம்பியர் 3. ஓம்ஸ் 4. கலோரி

(19) கொள்வனவாளரும், வழங்குனரும் ஒன்று கூடும் இடம்

1. சந்தை 2. கடை 3. தொழிற்சாலை 4. கம்பனி

(20) புரதச் சத்து கூடுதலாக அடங்கியுள்ள உணவு

1. அரிசி 2. மரவள்ளி 3. கோதுமை 4. சோயா அவரை

## பகுதி II

**முதலாம் வினா கட்டாயமானது. ஏனைய இரண்டு வினாக்களை தெரிவு செய்து மொத்தமாக மூன்று வினாக்களுக்கு விடை தருக.**

(1)

1. முதலாம் தவணையில் இப்பாடத்தில் மேற்கொண்ட கணிப்பீட்டு வகைகள் எவை?
2. இக் கணிப்பீட்டிற்கு தேவைப்பட்ட பொருட்களை குறிப்பிடுக
3. கணிப்பீடு செய்முறைகளை மேற்கொண்டதால் பெற்றுக் கொண்ட நன்மைகள் என்ன?
4. கணிப்பீட்டினை மேற்கொள்வதற்கு ஏற்பட்ட இடர்களை குறிப்பிடுக?

(10 புள்ளிகள்)

(2)

1. மண்வளம் குன்றுவதற்கான காரணங்கள் எவை?
2. மண்ணரிப்பை தடுப்பதற்கு ஏற்படுத்தப்படும் தடைகள் எவை?
3. கழிவுப் பொருள் முகாமையின் 3R எண்ணக்கருக்களும் எவை?
4. நாற்றுச் சாடிகளாகப் பயன்படுத்தக் கூடிய பொருட்கள் எவை?
5. வித்துக்களை தயார்படுத்தல் படிமுறைகள் எவை?

(10 புள்ளிகள்)



kalvi.lk

(3)

1. உணவு சமைக்கும் இடம் எவ் இயல்புகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்?
2. நுகர்வுக்குப் பொருத்தமான பொருட்களை தெரிவு செய்யும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் எவை?
3. முற்பரிகரிப்பு முறைகள் எவை?
4. மின் கட்டுப்பாட்டுத் துணைக் கூறுகள் 2 தருக
5. சந்தை என்றால் என்ன?

(10 புள்ளிகள்)

(4)

1. நிகழ்காலச் சந்தையின் அடிப்படைப் பண்புகள் 2 தருக
2. பொருளொன்றைச் கொள்வணவு செய்யும் போது நுகவோர் கவனம் செலுத்த வேண்டிய விடையங்கள் எவை?
3. சந்தை மோசடிகள் 2 குறிப்பிடுக?
4. தரையலங்கரிப்பின் போது கருத்தில் கொள்ளப் பட வேண்டிய விடயங்கள் 4 தருக
5. தரையங்கரிப்புத் திட்டத்தை ஆக்கப் பயன்படுத்தப்படும் கேத்திர கணித வடிவங்கள் எவை?

(10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන

kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457